★ விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 ஆடி 15 ஷவ்வா 20 இதழ் 169

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 31—7—83

## முதலாவது அகதிகள் கப்பல் இன்று இரவு வந்துசேரும்!

### 'என்ஜின்' கோளாறினல் தாமதம்ஏற்பட்டது

[கொழும்பு]

300 அகதிகளுடன் வெள்ளி நண்பகல் புறப்பட்ட கப்பல் என்ஜின் கோளாறு காரணமாக திரும்பி கொழும்புத் துறைமுகத்திற்குச் சென்று திருத்தம் செய்யப்பட்ட பின் மீண்டும் நேற்றுக் காலை புறப்பட்டது.

இக்கப்பல் இன்றுஞாயிற்றுக் கிழமைகாலை காங்கேசன்துறை துறைமுகத்திற்கு வந்து சேருமென எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை புறப்பட்ட முதலாவது கப்பலில் தமிழ் உயர் அதிகாரிகள், பெரும் பதவி வகித்தவர்கள், தொழிற்சாலை அதிபர்கள் குடும்பங்களே வந்தார்கள் என்று கூறப்படுகிறது.

இக்கப்பல்கொழும்புத்துறைமுகத்திலிருந்து வெள்ளி காலை 11 மணிக்கு புறப்பட்டு 60 மைல் சென்ற பின், கப்பல் என்ஜினில்கோளாறு ஏற்பட்டதாகவும் திரும்பவும் கப்பல் 60 மைல் திரும்பி கொழும்புத் துறைமுகத்துறகுச்சென்றதாகவும் கூறப்படுகிறது.

கொழும்புத் துறைமுகத்திற்குச் சென்றதாகவும், என்ஜின்

(6-ம் பக்கம் பார்க்க)

# அகதிகளுக்கு வசதிகள்செய்து கொடுக்கும் ஏற்பாடு பூர்த்தி!!

## உறவினரை துறைமுகத்துக்கு வரவேண்டாமெனக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து கப்பல்களில் இங்கு வரும் அகதிகளுக்கு வசதிகள் செய்து கொடுப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. காங்கேசன் துறைமுகத்திலிருந்து அகதிகளை அவரவர் இடங்களில் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளையும், தங்குவதற்கு இடமில்லாத அகதிகளுக்கு தற்காலிகமாகத் தங்குவதற்கான முகாமும் அமைக்கப்பட்டுள்ளன.

கப்பல்வந்து சேருவதில் தாமதம் ஏற்படுவதாலும், அகதிகளைப் பத்திரமாக அவரவர் இடங்களில்சேர்ப்பத கானஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாலும், உறவினர்கள் காங்கேசன்துறைத் துறைமுகத்துக்கு வரவேண்டாமென்று யாழ். அரசாங்க செயலக உயர்அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அங்கு உறவினர்கள் வராமல் இருப்பது சகல விதத்திலும் நல்லது என்றும் அவ்அதிகாரி தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நடந்த மகாநாட்டில்அகதிகள்தொடர்பான பல முடிவுகள் எடுக்கப்பட்டன.

அகதிகளுக்கு வசதிகளையும், உதவிகளையும் வழங்க யாழ்ப்பாணத்திலுள்ள பல நிறுவனங்கள் முன்வந்துள்ளன.

காங்கேசன் துறை சிமெந்துதொழிற்சாலைத்துறைமுகத்தை வந்தடையும் கப்பல்களில் வரும் அகதிகளை இறக்கி அவர்களுக்கு வசதிகள் எவ்விதம் செய்து கொடுப்பது என்பது குறித்து நேற்று முன்தினம் யாழ். அரசாங்க செயலகத்தில் யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா தலைமையில் மாநாடு ஒன்று நடைபெற்றது.

எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், கோப்பாய் எம். பி. திரு. எம். ஆலாலசுந்தரம், ராஜிஞ

(6-ம் பக்கம் பார்க்க)

திருநெல்வேலி, கல்வியங்காடு

## சந்தைகளில் காய்கறிகள் திடீர் விலை இறக்கம்!

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சந்தையிலும், கல்வியங்காடு சந்தையிலும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை திடீரென காய்கறிகள் விலை குறைந்தது.

கடந்த வியாழக்கிழமை இவ்விரு சந்தையிலும் காய்கறிகளின் விலைகள் மூன்று மடங்குஅதிகரித்திருந்தது. கத்தரிக்காய் கிலோ 18 முதல் 20 ரூபாவாகவும் பச்சை மிளகாய் கிலோ 20 ரூபாவாகவும் தேங்காய் ஒன்று 5 ரூபா வரையும் விற்பனை செய்யப்பட்டது.

இதனையறிந்து விவசாயிகள் இரவு இரவாக தோட்டங்களில் காய்கறிகளையும், பச்சை மிளகாய் தேங்காய் ஆகியவற்றை பறித்து வெள்ளிக் கிழமை காலை இவ்விரு சந்தைகளுக்கும் கொண்டு வந்தனர்

வெள்ளி காலை விலை உச்சக் கட்டத்தில் இருந்தது. காலை 8 மணியளவில் வியாபாரிகள் தாமகவே முன்வந்து காய்கறிகளை பாவனையாளருக்கு குறைந்த விலையில் விற்பனை செய்தனர். விவசாயிகளும், தாங்கள் சந்தைக்குக் கொண்டுவந்த காய்கறி மிளகாய்களை, வியாபாரிகளுக்கும், பாவனையாளருக்கும் குறைந்த விலைக்கே கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

வெள்ளி நண்பகல் 11 மணியளவில் கத்தரிக்காய் கிலோ 5 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது.

[6-ம் பக்கம் பார்க்க)

● கோடிக்கணக்கில் பெறுமதியான

## உணவுக்களஞ்சியத்துக்கு பலத்த பாதுகாப்பு

[கொழும்பு]

கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதியான உணவுப் பொருட்களைக் கொண்ட தனியார் நிறுவனத்தின் களஞ்சியங்களுக்குப் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

கொழும்பில் பிரபல வர்த்தகரான ஈ. சண்முகத்துக்குச் சொந்தமான உணவுப்பொருட்கள் கொண்ட களஞ்சியங்களே இவ்விதம் பாதுகாப்புக்குள்ளாகியுள்ளது.

வன்செயலுக்கும்,கொள்ளைக்கும் பலியாகாமல், மிகுந்த பாதுகாப்போடு இந்தக்களஞ்சியங்கள் இருப்பதற்கான ஏற்பாடுகளை ஜனாதிபதி செய்துள்ளார்.

பிரின்ஸ் ஒவ் வேல்ஸ் அவனியூவிலுள்ள இந்தக் களஞ்சியங்களிலிருக்கும்முழுப்பொருட்களையும் அரசு மொத்தமாகவாங்கி விநியோகிக்கவுள்ளது.

இந்தச் சீனி, மாவு பெறப்பட்டு, நாட்டில் விநியோகிக்கப்படவிருப்பதால் நாட்டில்

(6-ம் பக்கம் பார்க்க)

### செய்தித் தணிக்கை அமுல்

கடந்த புதன்கிழமை 20ம் திகதி முதல் பயங்கரவாதம் சம்பந்தமான செய்தித் தணிக்கை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவரும் ஒவ்வொரு செய்தியும் தணிக்கை அதிகாரியின் அனுமதி பெற்றே பிரசுரமாகிறது.

"தனியார் வர்த்தகர்கள்

## திங்கள் கடைகளைத் திறந்து வியாபாரம்செய்யவேண்டும்"

### அமைச்சர் லலித் வேண்டுகோள்

(கொழும்பு)

''தனிப்பட்ட வியாபாரிகள் வர்த்தகர்கள் சொந்த லாபம் கருதாது பாவனையாளர்களுக்கு சேவை செய்யவேண்டும்.''

வர்த்தக கப்பல்துறை அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி மேற்கண்ட வேண்டுகோளை விடுத்துள்ளார்.

எதிர்வரும் திங்கட்கிழமை தனிப்பட்ட வர்த்தகர்கள் கடைகளைத் திறந்து வியாபாரம் செய்ய வேண்டும் என்றும் கூறினார். சீனி மா, பருப்பு, ரின் மீன்களை கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை

அறிவித்தல்

காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை ஊழியர்கள் சகலரும்

01-08-1983-ம் திகதி (திங்கட்கிழமை)

வேலைக்குப் பிரசன்னமாயிருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தொழிற்சாலை முகாமையாளர்,
காங்கேசன் சிமெந்துத்தொழிற்சாலை,
காங்கேசன்துறை.

(8099)

# “பிரிவினை பற்றி கதைப்பதுகூட பாரதூரமான குற்றமாக்கப்படும்”

## நாட்டு மக்களுக்கு பிரதமர் செய்தி

(கொழும்பு)

‘‘பிரிவினைபற்றிக்கதைப்பது கூட பாரதூரமான குற்றமாக் கப்படும். இவர்கள் தங்கள் குடியுரிமைகள் அனைத்தையும் இழப்பார்கள்.’’

பிரதமர் திரு. ஆர். பிரேம தாசா, வானொலி மூலமும் தொலைக்காட்சி மூலமும் மக்க ளுக்கு விடுத்த செய்தியில் மேற் கண்டவாறுதெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது: இந்த அரசாங்கத்தின் பொரு ளாதார நடவடிக்கையினால் நாடுமுன்னேறுவதை சகிக்க முடியாத சமூகவிரோத சக்தி கள் அழிவுப்பாதையில் இறங்கி யிருக்கிறார்கள்.

மனித உயிர்கள் மிகப்பெறு மதிவாய்ந்தவை அவை அநியா யமாக பலியிடப்படுவதை அர சாங்கம் ஒருபோதும் அனும திக்காது. அதேவேளையில் யாருக்கும் அநீதிகளை விளைவிப் பதும் அரசாங்கத்தின் நோக்க மல்ல.

தேர்தல் மூலம் அதிகாரங் களை கைப்பற்றமுடியாத சில சக்திகள் இன்று வன்செயல் மூலம் அவற்றை சாதிக்க பிர யத்தனம் செய்கிறார்கள்.

மக்களிடையே வதந்திகளை பரப்பி பீதிகளை உண்டுபண்ணி தமது நோக்கங்களை நிறை வேற்ற முற்படுகிறார்கள். மக் கள் இவர்களையிட்டு விழிப்பாக இருக்கவேண்டும்,

வெளிநாடுகளுக்கு சென்று இலங்கையை துண்டுபோடும் நோக்கத்தோடு பிரசாரம் செய்வோர் நாடுதிரும்பியதும் கடும் நடவடிக்கைகளுக்கு உள் ளாக்கப்படுவார்கள். பிரிவினை பிரசாரங்களை தடைசெய்ய அரசாங்கம் எடுக்கும் நடவடிக் கைகளில் இதுவும் ஒன்றாகும்.

பிரிவினைகோரும் சகல கட்சி களும் தடைசெய்யப்படும். பிரி வினைபற்றி கதைப்பதுகூட பாரதூரமான குற்றமாக்கப் படும். இவர்கள் தங்கள் குடி யுரிமைகள் அனைத்தையும் இழப்பார்கள். (க)

---

# தெ. ப. பொ. கூ. சங்கத்தின் அறக்கொடை வைப்புத் திட்டம்

[புலோலி]

யாழ். மாவட்டத்தில் உள்ள தெங்கு பனம் பொருள் கூட் டுறவுச் சங்கங்கள் அறக் கொடைத் திட்ட வைப்பைச் செயற்படுத்தி வருகின்றன.

அரசாங்கம் வியாபார மொத்த விற்பனை வரியைப் பதினைந்து சத வீதத்திலிருந்து பத்துச்சத வீதமாகக்குறைத்த மையைத் தொடர்ந்து தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் குறைக்கப்பட்ட ஐந்து வீதத்தையும் சங்க அங் கத்தவர்களின் பெயர்களில் வங்கியில் அறக்கொடைத் திட் டக் கணக்கில் வைப்புச்செய்து வருகின்றன.

இவ்அறக்கொடைத் திட்டத் தின் கீழ் வைப்புச் செய்த பணத்துக்குரிய சான்றுப் புத்த கங்களைத்தெல்லிப்பளை தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற் பனவுக் கூட்டுறவுச் சங்கம் சங்க அங்கத்தவர் களிடம் கையளித்துள்ளது, இச்சங்கம் இதுவரையும் இவ்அறக்கொ டைத் திட்டத்தில் 53,500 ரூபாவை வைப்புச் செய்து இருக்கிறது என்று தெரிவிக்கப் பட்டது. [சு]

---

# குறைநிலையிலுள்ள பால வேலைகளை கட்டிமுடிக்க கி. உ. சபை கோரிக்கை

(கரவெட்டி)

புலோலி வேலாயுதம் ஆண் கள் மகாவித்தியாலயத்திற்கும் பருத்தித்துறை பிரதான வீதிக் கும் இடையில் உள்ள பாலம் குறைநிலையில் கட்டி முடிக்கப் படாது இருப்பதனால் மாண வர்கள் பெரும் ஆபத்திற்குள் ளாகிவருகின்றனர். மாணவர் களின் இவ்ஆபத்தை நீக்கு முகமாக இப்பால வேலைகளை உடனடியாகப் பூர்த்திசெய்ய நடவடிக்கை எடுக்குமாறு புலோலி கிழக்கு கிராமோதய சபை வடமாநிலக் கல்விப் பணிப்பாளரைக் கோரியுள் ளது.

இம்மகாவித்தியாலய மதில், வித்தியாலயத்தையும் பிர தான வீதியையும் இணைக்கும் பாலம் ஆகியனவற்றைஅமைப் பதற்கென 50,000 ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுக் கடந்த வருடம் நவம்பர்மாதம் ரெண்டர் கோரப்பட்டு வேலை கள் ஆரம்பிக்கப்பட்டன.

ஆனால் இவ் வேலைகள் இது வரை பூர்த்தியடையவில்லை. முக்கியமாக பிரதான வீதியை யும், வித்தியாலயத்தையும் இணைக்கும் பாலம் தற்போது மாணவர்களின் பொறிக்கிடங் காக பேராபத்தை ஏற்படுத் தக் கூடியதாக இருக்கின்றது. முன்னால் பிரதான வீதியிருப் பதனால் வீதி விபத்துகளும் அடிக்கடி ஏற்பட்டு வருகின் றன.

எனவே இவ்வித்தியாலய மதில் வேலைகளையும் பால வேலைகளையும் உடனடியாகப் பூர்த்தி செய்து மாணவர்களி னதும் பாதசாரிகளினதும் ஆபத்தை நீக்க நடவடிக்கை எடுக்குமாறு புலோலி கிழக்கு கிராமோதய சபைத் தலைவர் திரு ஏ. என். எஸ். திருச்செல் வம் வடமாநிலக் கல்விப்பணிப் பாளர் திரு எம். சிமியாம்பிள் ளையைக் கோரியுள்ளார்.

---

## மானிப்பாய் தொகுதி

# கல்வி அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீடு விபரம்

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் தேர்தல் தொகுதியிலுள்ள பாடசாலைக ளுக்கு கல்வி அபிவிருத்திக்காக இவ்வருட பன்முகப்படுத்தப் பட்ட வரவு செலவுத்திட்டத் தின் கீழ் மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் ஒதுக் கீடுசெய்துள்ள நிதிவிபரம்பின் வருமாறு:

மானிப்பாய் இந்துக்கல்லூ ரிக்கு ஒரு இலட்சத்து 50 ஆயி ரம் ரூபா. மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலக்கல்லூ ரிக்கு ஒரு இலட்சத்து 25 ஆயி ரம் ரூபா. நவாலி மகாவித்தி யாலயத்திற்கு 75 ஆயிரம் ரூபா. சுதுமலை அரசினர் தமி ழ்க்கலவன் பாடசாலைக்கு 75 ஆயிரம் ரூபா. இணுவில் அமெ ரிக்கமிஷன் த. க. பாடசா லைக்கு 45 ஆயிரம் ரூபா. சுன் ணாகம் இராமநாதன் கல்லூ ரிக்கு 75 ஆயிரம் ரூபா. சுன் ணாகம் நாகேஸ்வரி வித்தியா லயத்திற்கு 20 ஆயிரம் ரூபா. குப்பிளான் விக்கினேஸ்வரா வித்தியாலயத்திற்கு 50 ஆயி ரம் ரூபா. ஆனைக்கோட்டை கூழாவடி அமெரிக்க மிஷன் த. க. பாடசாலைக்கு 25 ஆயி ரம் ரூபா. கோட்டைக்காடு அ. த. க. பாடசாலைக்கு ஒரு இலட்சம் ரூபா. உயரப்புலம் ரோமன் க. த. பாடசாலைக்கு 85 ஆயிரம் ரூபா.

---

# பண்ணிசை, பேச்சுப் போட்டியில் பரிசு பெற்றோர்

(யாழ்ப்பாணம்)

திருஞானசம்பந்தர் குரு பூஜையை முன்னிட்டு யா/வண் நாவலர் மகாவித்தியாலயத் தில் நடைபெற்ற பண்ணிசை, பேச்சுப் போட்டிகளில் பரிசு பெற்றோர் விபரம் வருமாறு:-

**பண்ணிசை**

கீழ்ப்பிரிவு;- 1. கலாரஞ் சினி 2. சிவரோகிணி 3. சுகந் தினி.

மத்திய பிரிவு:- 1. வாசுகி 2. பிரேமா

மேற்பிரிவு:- 1. அ. வத் சலாதேவி 2. ந. பரிமளா தேவி

**பேச்சுப்போட்டி:-**

கீழ்ப்பிரிவு:- 1. க. ரேணுகா 2. சி, சிவரோகிணி 3. ப. அன்ரன்

மத்திய பிரிவு:- 1. ச. தமிழ்ச்செல்வி 2. இ. இரா ஜேஸ்வரி. 3. நா. அன்பரசி

மேற்பிரிவு:- 1. இ. இந்தி ராணி 2. மு. திருவரங்க நாயகி 3. க. வஸந்தகுமாரி

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் நிதயத்திலிருந்து குருபூஜை யும், பரிசளிப்பும் நடைபெற் றது.

---

# “எதிர்காலச் சந்ததியின் கல்வி மேம்பட பாடசாலைகள் சிறப்பாக இயங்கவேண்டும்”

(புலோலி)

‘‘எமது எதிர்காலச் சந்ததி யினரின் கல்வியறிவு மேம் பாடடைவதற்குப் பாடசாலை கள் சிறந்த முறையில் இயங்க வேண்டும். பாடசாலை அபி விருத்திச் சங்கங்கள் சிறப் பாக இயங்கும்போதுதான் பாடசாலைகள் அபிவிருத்தி யடைந்து வளர்ச்சியடைய முடியும். எதிர்காலச் சந்ததி யினரின் வாழ்வும் வளம் பெறும்.’’

இவ்வாறு பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரக்கல்லூரி பாடசாலை அபி விருத்திச்சங்கப் பொதுக்கூட் டத்திற்குத் தலைமை வகித்து உரையாற்றிய கல்லூரி அதி பர் திருமதி அரியரத்தினம் கூறினார்.

கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய அதிபர் திருமதி அரியரத்தி னம் கூறியதாவது:

‘‘பாடசாலைகளின் முன் னேற்றத்திற்குப் பெற்றோர் கள், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் ஆகிய சகலரும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும் என்பதனாலேயே அரசாங்கம் பாடசாலை அபி விருத்திச்சங்கங்களை உருவாக் கியது, இப்பாடசாலை அபி விருத்திச் சங்கங்கள் சிறப் பாக இயங்கினால்தான் பாட சாலைகள் அபிவிருத்தியடைந்து எமது எதிர்காலச் சந்ததியின ரின் வாழ்வு வளம்பெற வழி யேற்படும்.

‘‘பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் முன்னேற்றத்தி லும், வளர்ச்சியிலும் பெரும் பங்கெடுத்து முன்மாதிரியாக விளங்கி வருகின்றன. நான் அதிபராகப் பதவியேற்ற மிகக் குறுகிய காலத்தில் இப் பாடசாலை அபிவிருத்திச்சங்கம் இக்கல்லூரியின் அபிவிருத்திக் கும் எனக்கு அளித்த ஒத்து ழைப்புப் பாராட்டப்பட வேண்டியது. பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்வியில் எவ்வளவு கவனம் செலுத்து கின்றார்களோ, அதுபோல் தமது பிள்ளைகள் கல்வி கற் கும் பாடசாலைகளின் அபி விருத்தி நடவடிக்கைகளிலும் கவனம் செலுத்தவேண்டும்’’ என்றார்.

பாடசாலை அபிவிருத்திச்சங்கச் செயலாளரும், யாழ். உள் நாட்டு வர்த்தக உதவி ஆணை யாளருமாகிய திரு. எஸ். ரி. மார்க்கண்டு உரையாற்றுகை யில் ‘‘பாடசாலை அபிவிருத் திச் சங்கங்கள் சிறப்பாக இயங் கப்பெற்றோரின் ஒத்துழைப்பு மிக இன்றியமையாதது. பாட சாலைகளில் என்னென்ன நடை பெறுகின்ற தென்பதைப்பெற் றோர் அறிந்துகொள்ளவேண் டும். அப்போதுதான் பாட சாலைகளின் அபிவிருத்தி நட வடிக்கைகளை மேம்படுத்தமுடி யும்’’ என்று கூறினார்.

---

# கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

நீண்டகாலமாக பண்டத்த ரிப்பு முல்லையடிப் பகுதியில் இயங்கிவந்த கள்ளுத் தவற ணையை பண்டத்தரிப்பு சந் தைக்கு சமீபமாகவுள்ள காணி யொன்றுக்கு இடமாற்றம் செய்வதற்கு இப்பகுதியிலுள்ள பொதுநல இயக்கங்கள் பலத்த ஆட்சேபம் தெரிவித்துள்ளன.

மக்கள் கூடுதலாக வசித்து வரும் இப்பகுதியில் கள்ளுத் தவறணை நிறுவுவதால் இப் பகுதியில் அமைதியின்மையும் சண்டைசச்சரவுகளும் ஏற்பட வழிவகுக்கும் என்றும் இந்த இயக்கங்கள் வலி. தென் மேற்கு உதவி அரசாங்க அதி பருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் சுட்டிக்காட்டியுள் ளன.

---

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல தரமான அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக் குண்டு. சி. சிவகுமாரன், பொன்னையாஒழுங்கை, ஆனைக் கோட்டை. 8098

## சேவை

கட்டிடங்கள் நிர்மாணிப்ப தற்கான வரைபடங்கள் கீறு வதிலும், நிர்மாணங்களுக்குத் திட்டமிடுதலுக்குமென ஆலோ சனை பெறுவதற்கும், எம்மை நாடுங்கள், அரச அங்கீகாரம் பெற்ற கட்டிட ஒப்பந்தகாரர். இ. ந. செல்வராசா, உடையா மணல் வீடு, வல்வெட்டித் துறை. பருத்தித்துறை தொடர்பு விலாசம்: க. ஸ்ரீஸ்கந்தராசா, அரச மொழி பெயர்ப்பாளர், நீதிமன்றவீதி, பருத்தித்துறை. 8056

---

# பாடசாலை கட்டடங்கள்

(கொழும்பு)

ஆயுதப்படையினர், பொலி சார் மற்றும் அத்தியாவசிய சேவைகளில் ஈடுபட்டுள்ளோர் களுக்கு பாடசாலைக் கட்டடங் களைக் கொடுத்துதவும்படி சகல கல்விப் பணிப்பாளருக் கும் கல்வி அமைச்சு பணித் துள்ளது. (க)

---

# போட்டி முடிவுகள்

(நயினாதீவு)

நயினாதீவு மணிபல்லவ கலாமன்றம் 21வது கலை விழா வினையொட்டி நடாத்திய பேச் சுப் போட்டிகளில்பரிசில்களைப் பெற்றவர்கள் பின்வருமாறு:

பாலர் பிரிவு: நா. சண்முக நாதன், சி. அருளரசி, மு. பிர கலாதன்.

கீழ்ப்பிரிவு: ப. சுகந்தவேல், நா. லதா, ம. நிமலி.

மத்தியபிரிவு: க. சுதர்சனா, தி. ஜெயபாலன், வ. கலாஸ்ரீ நீதிமணி.

மேற்பிரிவு: நா. சீதாலெட் சுமி, ப. விமலேஸ்வரி, இ. ஞானகௌரி.

இவர்களுக்கான பரிசில்களை கலைவிழா நிகழ்ச்சியில் திரு வே. ச. விசுவலிங்கம் வழங்கி னார். (கி)

---


யாழ்நகரில்

பலவகைப் பரிசுப் பொருட்கள்



எவர்சில்வர்

கிளாஸ் வகைகள்

ரி. வி. றேடியோ

கடிகாரங்கள்

மின் இயக்கப் பொருட்கள்

பிளாஸ்ரிக் பொருட்கள்

பிளாஸ்ரிப் பூக்கள்

சமையலறை உபகரணங்கள்

எண்ணம் போல் வண்ணத் தெரிவுக்கு

பிரவுண்சன் ரேட் சென்ரர்

பன்முகக் கூட்டுறவுக் கட்டடம்

கே. கே. எஸ். வீதி.

யாழ்ப்பாணம்.

## கொழும்பில் மீண்டும் தீவைப்பு, கொள்ளை:

# ஆயுதப்படையினரால் 15 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்!

### 300 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்; ஊரடங்கு தீவிரமாக அமுலாகிறது

### ‘விடுதலைப்புலிகள்’ கொழும்புக்குள் வரவில்லை

(கொழும்பு)

கொழும்பில் மீண்டும் தீவைப்பு, கொள்ளைச்சம்பவங்கள் ஆரம்பமானது. ஆயுதப் படையினரால் வன்செயலில் ஈடுபட்ட 15 பேர் அந்த இடத்திலேயே சுட்டுக் கொல்லப்பட்டனர். 300 பேர் கைது செய்யப்பட்டனர்.

ராஜாங்க அமைச்சின் செயலாளர் திரு. டக்ளஸ் லியனகே வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

‘‘கொழும்பில் படிப்படியாகச் சீரடைந்துவந்த நிலைமை வெள்ளி நண்பகலுடன் மீண்டும் மோசமடைந்தமை பெரும் துர்ப்பாக்கியமே.

யாழ். நகர் விகாரை பிரதம குரு தாக்கப்பட்டார் அல்லது கொல்லப்பட்டார் என்றவதந்திகள் பரப்பப்பட்டன. அவர் மாத்தறை மாவட்டத்திலுள்ள அவரது சொந்த விகாரையில் எவ்வித ஆபத்துமின்றி சுகமாக இருக்கிறார்.

கொழும்பில் ஏற்பட்ட வன்செயலில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர் என்ற பொய்க் கதைகள் பரப்பப்பட்டன. இவற்றில் எவ்வித உண்மையுமில்லை.

வன்செயல் ஆரம்பமானதற்குப் பின் கொழும்பு மாநகரிலும் அதன் சுற்றுப்புறத்திலும் 21 பேர் வன்செயலில் ஈடுபட்டபோது உயிரிழந்தனர். கொழும்பில் வெள்ளி நண்பகல் 15பேர் சுட்டுக்கொல்லப் பட்டனர். வெலிக்கடைச்சிறைச்சாலையில் பலியான 52 தமிழ்க் கைதிகள் இதில் சேர்க்கப்படவில்லை.

அரசு நிர்வாகத்தைச் சீர்குலைக்கும் நோக்கத்துடனும் அரசுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் நோக்கத்துடனும் சிலதீய சக்திகள் பொய்யான வதந்திகளைப் பரப்பி வருகின்றனர்.

தொழிற்சாலைகளை, வேலைத் தளங்களைத் தீவைத்து முற்றாக நாசமாக்கிப் பெரும் இழப்பை ஏற்படுத்தி அதன்மூலம் அந்தந்தப் பகுதியைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான வர்களை வேலையற்வர்களாக்கிய ஒரு பிரிவினர் இப்பொழுது வட பகுதியைச் சேர்ந்த பயங்கரவாதிகள் கொழும்பிற்குள் ஊடுருவி விட்டார்கள் என்ற பொய்க் கதையைக் கட்டவிழ்த்துவிட்டு மேலும் நாசவேலைகளில் ஈடுபட்டுவர முயற்சிக்கிறார்கள்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் என்போர் கொழும்பு மாவட்டத்திற்குள் வரவில்லை என்பதை அரசாங்கம் திட்டவட்டமாகத் தெரிவிக்கின்றது. புலிகள் வரவுமில்லை; ஆயுதப்படையினரைத் தாக்கவுமில்லை என்று அறிவிக்கப்படுகிறது.

(5-ம் பக்கம் பார்க்க)




## கொழும்பில் சுமாரான பஸ் சேவைகள்

(கொழும்பு)

ஊரடங்குச் சட்டம் நேற்றுக் காலை 5 மணிக்கு தளர்த்தப்பட்டதும் கொழும்பில் சுமாரான பஸ் சேவை நடத்தப்பட்டது. ஏனைய இடங்களில் பஸ்சேவை வழமைபோல் இல்லாவிட்டாலும் ஓரளவு நடைபெற்றது.

கொழும்பில் அலுவலகங்களுக்கும், கூட்டுத்தாபனங்களுக்கும் குறைவாகவே ஊழியர்கள் வந்திருந்தனர். இவர்கள் நண்பகலுடன் வீடு திரும்பிவிட்டனர்.

கண்டியில் நேற்றும் அலுவலகங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன என்றும், அத்தியாவசிய சேவை ஊழியர்கள் வேலைக்கு வரவேண்டும் என அரசாங்க அதிபரினால் பணிக்கப்பட்டிருந்தனர்.

## கொழும்பில் தேங்காய் ஒன்றின் விலை 10 ரூபா!

(கொழும்பு)

கொழும்பில் தேங்காய் ஒன்றின் விலை 10 ரூபாவிற்கு மேலாக அதிகரித்துள்ளது.

குருநாகல் மாவட்டத்தில் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையினால் நிர்வகிக்கப்படும் தோட்டத்திலிருந்து 2 லட்சம் தேங்காய்களை கொழும்பிற்கு அனுப்பிவைக்க அவசர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாத்தளையிலிருந்து கொழும்புக்குக் காய்கறிகள் அனுப்பப்பட்டுள்ளது.

## அத்தியாவசியப் பொருட்களுக்கு கொழும்பில் தினமும் நீண்ட ‘கியூக்கள்!’

(கொழும்பு)

கொழும்பு மாநகரில் தினமும் மக்கள் வரிசையில் நின்று பொருட்களை வாங்கச் செல்வதைக்காணக்கூடியதாக இருந்தது.

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்கள், ப. நோ. கூ. சங்கங்கள், விற்பனைத் திணைக்கள கடைகள், தனியார் வர்த்தக நிலையங்கள் நேற்றுத் திறந்திருந்தன.

ப. நோ. கூ. சங்கங்கள் பொருட்களைப் பெற வசதியாக மக்கலம் வீதியிலுள்ள களஞ்சியசாலை ஒன்று பிற்பகல்வரை திறந்திருந்தது.

அரிசி, மா, சீனி போதியளவு கையில் உள்ளதாகவும் தட்டுப்பாடு ஏற்படக் காரணம் இல்லையென்றும் வர்த்தக அமைச்சு அறிவித்துள்ளது. (க)

## இந்திய வெளிவிவகார அமைச்சர் கண்டிக்கு விஜயம்

### நிலைமைகளை அறிந்துகொண்டார்

[கண்டி]

இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. நரசிம்மராவ் நேற்று ஹெலிகெப்டர் மூலம் கண்டிக்கு விஜயம் செய்தார். கண்டியில் இந்திய பிரதி உயர் ஸ்தானிகர் அவரை வரவேற்றார். உயர்ஸ்தானிக நிலைய ஊழியர்களுடன் திரு. நரசிம்மராவ் அரை மணி நேரம் உரையாடி நிலைமைகளை அறிந்து கொண்டார். கண்டி அரசாங்க அதிபர், மாநகர முதல்வர் ஆகியோரையும் அவர் சந்தித்தார். (க]

## முகாம்களில் சுகாதார ஏற்பாடுகள்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள அகதிகள் முகாம் சுகாதார ஏற்பாடுகள் பற்றி ஆலோசிக்க சுகாதார அமைச்சர் ரஞ்சித் அத்தபத்து தலைமையில் மாநாடு ஒன்று நடைபெற்றது.

கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியில் நடந்த இம்மகாநாட்டில், உலக சுகாதார ஸ்தாபனம், யூனிசெப் ஸ்தாபனம், அகதிகள் முகாம்களில் சுகாதார சேவைக்குப் பொறுப்பாகவுள்ள அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (க)

## நரசிம்மராவ் ஜனாதிபதியை சந்தித்தார்

(கொழும்பு)

இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. நரசிம்மராவ், ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவை நேற்றுச் சந்தித்து தற்போதைய நிலைமைபற்றி பேச்சுவார்த்தை நடத்தினார்.

## கடுமையான நடவடிக்கை

(கொழும்பு)

கொழும்பு மாநகரில், கொள்ளைச் சம்பவங்கள் தலை தூக்கியதைத் தொடர்ந்து ஆயுதப்படையினர் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். (க)

## லீவுகள் ரத்து!

(கொழும்பு)

கூட்டுறவு இலாகா, பஸ் போக்குவரத்து சபை, நீர் விநியோக சபை, சுகாதார சேவை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மின்சார சபை ஊழியர்களின் லீவுகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. (க)

## தீய சக்திகளால் வதந்திகள் பரப்பப்படுகின்றன அரசுக்குத் தகவல்

(கொழும்பு)

சமூக விரோத சக்திகள் நாட்டில் பல்வேறு வதந்திகளைப் பரப்பி வருகிறார்கள் என்று அரசாங்கத்திற்குத் தகவல் கிடைத்துள்ளது. பொது மக்கள் இந்த வதந்திகளை நம்பிக் கலவரமடையவேண்டாம் என்று கேட்கப்பட்டுள்ளனர். (க)

## உணவு விநியோகம்

(கொழும்பு)

உணவு விநியோகம் சம்பந்தமாக ஊழியர்கள் இரவு பகலாக வேலைசெய்து, மக்களின் அத்தியாவசிய உணவு சேவையைப் பூர்த்தி செய்ய வேண்டுமெனக் கூட்டுறவுத் திணைக்களமும், உணவு ஆணையாளர் திணைக்களமும், கேட்டுள்ளது.

ஊரடங்ச் சட்டம் இல்லாத நேரங்களில் கட்டாயமாகப் ப. நோ. கூ. சங்கங்கள் திறந்திருக்கவேண்டுமென்று பணிக்கப்பட்டுள்ளது. (க)

## மண்ணெண்ணை விநியோகம்

(கொழும்பு)

பாவனையாளர்களுக்கு மண்ணெண்ணை விநியோகத்தை உறுதிப்படுத்துமாறு அதிகாரம் பெற்றுள்ள விற்பனையாளர் அனைவரும் கேட்கப்பட்டுள்ளனர். குறிப்பாக பௌசர்களை கொண்டுள்ள ப. நோ. கூ. சங்கங்கள் இந்த முயற்சிக்கு உதவவேண்டும் எனக்கேட்கப்பட்டுள்ளது.

## வர்த்தகர்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

கொள்ளை லாபமடிக்கும் வர்த்தகர்கள், பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்திற்கு அமையவும், அவசர காலச் சட்டவிதிகளுக்கு அமையவும் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்களென்று வர்த்தக அமைச்சு அறிவித்துள்ளது.

## திருமலையிலிருந்து கொழும்புக்கு மா!

(கொழும்பு)

திருகோணமலை பிறிமா ஆலையிலிருந்து கொழும்புக்கு மா கொண்டுவரப்பட்டுள்ளது. கொழும்பிலிருந்து உணவுப் பொருட்கள் காலிக்குகொண்டு செல்லப்படுகின்றன. தனியார் துறை வர்த்தக ஸ்தாபனங்கள் சீனி, மா, பருப்பு, ரின் மீன் ஆகியவற்றை கூட்டுறவு மொத்த சில்லறை நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம். (க)

# ஊரடங்கு நேரத்தில் எவரும் வெளியில் வரவேண்டாம்; உடன் சுடப்படுவார்கள்!

(கொழும்பு)

கொழும்புப் பகுதிகளில் நேற்று முன்தினம் நடைபெற்ற தீ வைப்புக் கொள்ளைச் சம்பவங்களின்போது ஆயுதப் படையினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததனால் 15 பேர் கொல்லப்பட்டனர்.

இரத்மலானை கல்கிசையில் 5 பேரும், தெஹிவளையில் இருவரும், கண்ணுஸ்பத்திரிச் சந்தியில் ஒருவரும், வேறு இடத்தில் 5 பேரும் தீ வைப்புக் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டபோது ஆயுதப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

கொழும்பிலும் கம்பஹாவிலும் வன்செயல்கள் ஆரம்பமானதைத் தொடர்ந்து சனிக்கிழமை முழு நாளும் ஊரடங்கு அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஊரடங்கு இப்பகுதிகளில் கடுமையாக அமுல் நடத்தப்படுகிறது. ஊரடங்கு நேரத்தில் வீதிகளில் நடமாடுவோர் உடன் சுட்டுக்கொல்லப்படுவார்கள். எக்காரணம் கொண்டும் எவரும் ஊரடங்கு நேரத்தில் வெளியில் செல்ல வேண்டாமென்று கேட்கப்பட்டுள்ளனர்.

## அகதிகள் முகாம்கள்: பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது

(கொழும்பு)

கொழும்பு மாவட்ட அமைச்சர் திரு. வீரசிங்க மல்லிமராச்சி தலைமையிலான இணைப்புக்குழு முகாம்களில் தங்கியிருக்கும் அகதிகளுக்கான உணவு வசதிகளை செய்துள்ளது. முகாம்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது!

## தோட்டப் பகுதிகளில் பதட்டநிலை: வானொலிச் செய்தியின் பின்னர் தணிந்துள்ளது!

[கொழும்பு]

தோட்டப் பகுதிகளில் ஏற்பட்ட பதட்ட நிலை, வதந்திகளை நம்பவேண்டாம் என்ற வானொலிச் செய்தியினால் பின்னர் தணிந்துவிட்டது.

பதுளை பண்டாரவளையிலும் அவற்றைச் சுற்றியுள்ள தோட்டப் பகுதிகளில் பதட்டநிலை உருவாகிவருவதாகவும் நேற்று மாலை தகவல் கிடைத்ததாக இலங்கை வானொலி அறிவித்திருந்தது.

தோட்டப் பகுதி மக்களும் அப்பகுதி கிராமவாசிகளும் மோதலுக்கு ஆயத்தமாகிறார்கள் என்ற தகவல் கிடைத்ததாகவும் வானொலி அறிவித்தது.

இவ் வதந்தியில் உண்மையில்லை என்றும்யாரையும், எவரும்தாக்க முற்படவில்லையென்றும்வானொலி மூலம் எடுத்துக் கூறப்பட்டதையடுத்து பதட்ட நிலை தணிந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## வங்கி சேவைகள்

(கொழும்பு)

வங்கிகள் கொடுக்கல் வாங்கலுக்காக சிறிதுநேரம் நேற்று திறந்திருந்தன.

மக்கள்வங்கி, இலங்கை வங்கிக்கிளைகள் கொடுக்கல் வாங்கலுக்காக சிறிது நேரம் திறந்திருந்தன.

## 47ம் இலக்க உணவு முத்திரைகள்

(கொழும்பு)

உணவு மற்றும்மண்ணெண்ணை முத்திரைகளின் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது. 47ம் இலக்க உணவு மண்ணெண்ணை முத்திரைகளை பாவனையாளர்கள் அடுத்த மாதம் 20ம் திகதிவரை பயன்படுத்தமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## மிளகாய் வெங்காயம்

(கொழும்பு)

நுவரேலியாவிலிருந்து பெருமளவு காய்கறிவகைகள் கொழும்புவந்து சேர்ந்தன. காங்கேசன் துறையிலிருந்து மிளகாய், வெங்காயம்கொழும்பிற்கு வந்துசேரவிருக்கின்றன, இவை பின்னர் லொறிகள் மூலம் வேறு பகுதிகளுக்கும் அனுப்பப்படும். (க)


மிகச் சிறுதொகைப் பணத்திற்குப் புத்தம் புதிய தையல் மெஷீன்!

இதோ, உங்களுக்கு சிங்கர் வழங்கும் விசேட தவணைக் கொடுப்பனவுச் சலுகை!

அதி நவீன தொழில் நுட்பத்தில் உருவான சிங்கர் 15 NL 1 அல்லது 15 NL 2 தையல் மெஷீன் ஒன்றை உங்களது உரிமையாக்கிக் கொள்ள இதுவே இலகுவான வழி.

முதலில் சிறுதொகை மட்டுமே செலுத்திப் புத்தம் புதிய தையல் மெஷீன் ஒன்றை எடுத்துச் செல்லுங்கள். எஞ்சிய தொகையை இலகுவான தவணைகளில் செலுத்தலாம்.

இல்லத்தில் இன்பம் பொங்க சிங்கரின் துணையை நாடுங்கள்.

சிங்கர் உங்கள் தையல் வேலையைச் சுலபமாக்குகின்றது.

விலை: 15 NL 1 ரூ 3173/-
15 NL 2 ரூ. 2073/-
வரிகள் தனி.




சிங்கர்*

சிங்கர் தவணைக் கொடுப்பனவுத் திட்டம் பொருட்களை வாங்க மிகச் சிறந்த வழி

* சிங்கர் கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட வர்த்தக அடையாளம்

### திருச்சியில் பஸ் விபத்து:

# 13 பேர் பலி; 39 பேர் பலத்த காயமடைந்தனர்!

சென்னை, ஜூலை 30

திருச்சியில் தனியார் பஸ் ஒன்று சாரதியின் நடத்தைத் தவறினால் விபத்துக்குள்ளானதில் 13 பேர் மாண்டனர், 32 பேர் பலத்த காயமடைந்தனர்.

பஸ்ஸில் பிரயாணம் செய்த மாணவர்களுக்கும் சாரதிக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டதையடுத்து சாரதி நிலை குலைந்து மூர்க்கத்தனமாக பஸ்ஸை ஓட்டி செல்லும் போது விபத்து ஏற்பட்டது. பின்னர் சாரதி கைது செய்யப்பட்டார்.

இவ்விபத்து திருச்சி மாவட்டத்தையே சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. இதன் எதிரொலியாக இம்மாவட்டத்தில் நேற்றைய தினம் பொது விடுமுறை தினமாக அரசினால் அறிவிக்கப்பட்டது. (சூ)

## உடைகள் தருமாறு பௌத்த காங்கிரஸ் வேண்டுகோள்

(கொழும்பு)

உடைகள், குழந்தைகளுக்கான பால் உணவுகள் ஆகியவற்றை கொடுத்துதவுமாறு இலங்கை பௌத்த காங்கிரஸ் வசதிபடைத்தவர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. அன்பளிப்புகளை வழங்க விரும்புவோர் அவற்றை பௌத்த லோகமாவத்த தலைமையத்துக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளன.

## நாத்திகர்களை சாடுகிறார் பிரதி அமைச்சர் பரீத்

(மன்னார்)

''உலகம் சந்தர்ப்பவசத்தால் உருவானதென நாத்திகர்கள் கூறுவார்கள். அவர்கள் கூறுவது உண்மையானால் சூரியனும், சந்திரனும்குறிப்பிட்ட நேரத்தில் உலகத்தைச் சுற்றி வரமுடியாது''.

இவ்வாறு மன்னார்-தாராபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் அளிக்கப்பட்ட பொதுவரவேற்பில் கலந்து கொண்டு உரையாற்றிய கிராமிய அபிவிருத்தி பிரதியமைச்சர் ஜனாப் பரீத் மீராலெப்பை தெரிவித்தார்.

தாராபுரம் அல்மினா மகா வித்தியாலயத்தில்நடைபெற்ற இவ்வைபவத்திற் தொடர்ந்து உரையாற்றிய கிராமிய அபிவிருத்தி பிரதியமைச்சா தமது உரையில் கூறியதாவது:

''எமது முக்திக்கு வழி திருக்குர் ஆனைப் பின்பற்றுவதேயாகும்.

''அல்லாவைத் தவிர நாம் வணங்கக்கூடிய சக்தி எதுவுமேயில்லை. எழுதப்படிக்கத்தெரியாத முகமதுநபிக்கு படி என கட்டளை பிறப்பிக்கப்பட்டது,

ஆதலால் நாம் எல்லோரும் கல்வி கற்க வேண்டும். ஒவ்வொரு விடயத்தைப்பற்றியும் நன்றாக ஆராயவேண்டும்.

மனித இனம் சுபிட்சமாக வாழ்வதற்கு வேண்டிய வழிவகைகள் திருக்குர் ஆனில் குறிப்பாகச் சொல்லப்பட்டுள்ளன.

## மிக் - 27 விமானங்களைத் தயாரிக்க சோவியத்-இந்தியா ஒப்பந்தம்

புதுடில்லி, ஜூலை 30

மிக்-27 ரக விமானங்களை தயாரிப்பதற்கு இந்தியா சோவியத் யூனியனுடன் ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பமிட்டுள்ளது.

இத்தகவலை இந்திப் பாதுகாப்புஅமைச்சர்ஆர். வெங்கட்ராமன் லோக்சபாவில் தெரிவித்தார்.

பாகிஸ்தான் சீனாவிடம் இருந்து பல நவீன போர் விமானங்களையும், அமெரிக்காவிடமிருந்து எவ்-16 ரக போர் விமானங்களை வாங்கியுள்ளது.

இத்தகைய ஒரு நிலையில் இந்தியாவும் சமாதான நோக்கங்களுக்காக ஆயுதங்களை உற்பத்தி செய்தல் அல்லது கொள்வனவு செய்தல் நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும். இதன் ஒரு அம்சம்தான் சோவியத்துடன் மேற்கொண்ட மிக் விமான ஒப்பந்தமாகுமென்று இந்திய பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார். (சூ)

## வவனியாவில் அமைதி!

[கொழும்பு]

வவனியாவில் அமைதியான சூழ்நிலை நிலவுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வவனியா அரசாங்க அதிபர் திரு. எஸ். லோகேஸ்வரன் அலுவலகத்தில் கூட்டிய மகாநாட்டில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி ஆராயப்பட்டது.

இம்மகாநாட்டிற்கு வவனியா மாவட்ட அமைச்சர் திரு. மகிந்த சோம தலைமை தாங்கினார். (க)

## சீன-இந்திய பேச்சுவார்த்தை

இஸ்லாமாபாத், ஜூலை 30

இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையே எல்லை பிரச்சனைகள் இருந்தாலும்கூட இருநாடுகளும் தமக்கிடையான உறவுகளை வலுப்படுத்த பரஸ்பரம் பேச்சு வாத்தைகளை ஆரம்பிக்க வேண்டுமென சீன வெளியுறவு அமைச்சர் இஸ்லாமாபாத்தில் தெரிவித்திருக்கிறார். (சூ)

## 'உண்மையான நிலைமை'

(கொழும்பு)

வானொலி மூலம் அரசாங்கம் உண்மையான நிலைமை பற்றி அறிவித்துவருகின்றது. மக்கள் அமைதியாக இருந்து வானொலி மூலம் அரசாங்கம் கூறுவதற்கு ஏற்ப நடக்கும்படி கேட்கப்படுகிறார்கள். (க)

## இ. காங்கிரஸில் சேர்ந்தார்

சென்னை, ஜூலை,30

பாண்டிச்சேரி முன்னாள் துணை சபாநாயகர் யோசப் மரியதாஸ் தி.மு. கழகத்திலிருந்து விலகி இந்திரா காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து கொண்டார். (சூ)

## பதுளை, பண்டாரவளை தோட்டப் பகுதிகளில் பரப்பப்பட்ட வதந்திகளில் உண்மை இல்லை!

### அரசு அறிவிப்பு

(கொழும்பு)

பதுளை பண்டாரவளை மற்றும், தோட்டப்பகுதிகளில் வாழும் தொழிலாளர்கள், அப்பகுதி மக்களை தாக்குவதற்கு தம்மை தயார் செய்து வருகிறார்கள் என்றும், இந்த தாக்குதலை முறியடிக்க அந்தப் பகுதி கிராம மக்கள் தங்களை ஆயத்தம் செய்து கொள்ளுகிறார்கள் என்றும் அங்கு வதந்தியொன்று பரப்பப் பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

இந்த வதந்தியில் எந்தவிதமான உண்மையும் கிடையாது என்றும், யாரையும் தாக்க யாரும் ஏற்பாடு செய்யவில்லையென்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

வதந்திகளை நம்பி கலவரம் அடைய வேண்டாம் என்று மக்கள் கேட்கப்படுகிறார்கள். (க)

தனிப்பட்ட

## வர்த்தகர் மகாநாடு

(கொழும்பு)

வர்த்தக கப்பல் துறை அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி நாளை திங்கட்கிழமை கூட்டும் மகாநாட்டிற்கு தனிப்பட்ட வர்த்தகப் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டுள்ளனர்.

பொருள் விநியோகம் சம்பந்தமாக இம்மகாநாட்டில் எடுத்துக் கூறப்படும் என்று தெரியவருகிறது.

## கட்சியிலிருந்து விலகினார்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரியில் மேற்பார்வையாளராக (ஓவர்சியர்) கடமையாற்றும் திரு. கே. செல்வராசா ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஆஸ்பத்திரியில் கடமையாற்றுவதையே தமது முக்கிய நோக்கமாகக் கொண்டிருப்பதாகவும், ஐக்கிய தேசியக் கட்சியுடன் எந்தவித தொடர்பும் வைத்துக்கொள்ள மாட்டேனென்றும் திரு. செல்வராசா விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (மா)

## கிரிக்கெட்: இங். — 225 நியூசிலண்ட் 5-225

லண்டன், ஜூலை 30

இங்கிலாந்து கிரிக்கெட் கோஷ்டிக்கும் நியூசிலாந்து கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையே நடைபெற்றுவரும் இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட்போட்டியில் இங்கிலாந்து கோஷ்டி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கட்டுகளையும் இழந்து 225 ஓட்டங்களை எடுத்தது.

நியூசிலாந்து கோஷ்டி முதலாவதுஇன்னிங்ஸில் 5விக்கட்டுகளை இழந்து 252 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து கோஷ்டி வெற்றிபெற்றது தெரிந்ததே. (வெ)

## பஸ் விபத்து: 25 பேர் பலி!

புடடில்லி, ஜூலை, 30

உத்தரபிரதேசத்தில் இடம்பெற்ற பஸ் விபத்தொன்றில் 25 பேர் பலியானார்கள். இவர்களில் ஒரு குழந்தை உட்பட 19 பேர் ஸ்தலத்தில் பலியானார்கள்.

6 பேர் ஆஸ்பத்திரியில் காலமானார்கள். (வெ)

## 4வது அனல்மின் நிலையம் தென்இந்தியாவில்

புதுடில்லி, ஜூலை, 30

இந்தியாவின் நான்காவது அனல் மின் நிலையம் தென்னிந்தியாவில் நிறுவப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் எந்த மாநிலத்தில் நிறுவுவது என்று இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை.

இந்நிலையத்தைத் தத்தமது மாநிலங்களில் அமைக்க எல்லா தென்னிந்திய மாநிலங்களும் விருப்பம் தெரிவித்துள்ளன. (சூ)

## சர்வோதய தொண்டர்கள் உதவி

(கொழும்பு)

சர்வோதய இயக்க தொண்டர்கள் அகதிகளுக்கு உதவுவதில் அதிக ஆர்வம் காட்டி வருகிறார்கள். சர்வோதய தலைவர் திரு ஆரியரத்ன அடிக்கடி இரத்மலானை அகதிகள் முகாமுக்குச் சென்று வேலைகளைக் கவனித்து வருகிறார். சகல உறுப்பினர்களும் தொண்டர்களும் தேவையான சேவைகளைச் செய்ய வேண்டுமென அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (க)

## உணவுப் பொருட்கள்

(கொழும்பு)

கரையோர மாகாணங்களுக்கு உணவுப் பொருட்களையும் அத்தியாவசிய பொருட்களையும் கொண்டு செல்வதற்கு கரையோர கப்பற் சேவை நிறுவனத்துக்கு சொந்தமான கப்பல்கள் பயன்படுத்தப்படும்.

## இடமாற்றம்

(கரவெட்டி)

பருத்தித்துறை பஸ் டிப்போவில் உதவி சாலை முகாமையாளராக கடமையாற்றிய திரு. ஏ. மாசிலாமணி வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் திடீர் பரிசோதனைக் குழுவின் மேலதிகப் பொறுப்பதிகாரியாக இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளார்.

## ஆயுதப்படை...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

தேச பக்தியுள்ள சகல பிரஜைகளும் இந்த இக்கட்டான வேளையில் அரசாங்கத்துடன் ஒத்துழைத்து தேசிய அபிவிருத்தித் திட்டங்களைக் காப்பாற்றவும், கொள்ளை, தீவைப்புப் போன்ற செயல்களை நிறுத்தவும் உதவ வேண்டுமென்று பாதுகாப்பு அமைச்சு வேண்டுகோள்விடுக்கிறது.'' (க)

## பிரிட்டிஷ் திரைப்பட நடிகர் காலமானார்

லண்டன் ஜூலை. 30

பிரிட்டிஷ் பிரபல திரைப்பட நடிகர் டேவிட் நெலன் காலமானார். இவர் 100 க்கும் மேற்பட்ட ஆங்கிலத் திரைப்படங்களில் நடித்துப் புகழ் பெற்றவரென்பது குறிப்பிடத்தக்கது. (வெ)

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 4-15, 7-00
சனி, ஞாயிறு 1-30
சிவகுமார்-சரிதா
வண்டிச்சக்கரம்

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 10-30, 1-30, 6-15
சிவாஜி-சரிதா
ராதா-ராஜீவ் துணை
(கலர்)

மனோகரா (யாழ். நகர்.)
தினசரி 3 காட்சிகள்
ரஜனிகாந்த்-ஶ்ரீவித்யா
பொல்லாதவன்

ராஜா (யாழ்நகர்)
10-30, 1-30, 6-00
பாக்கியராஜ்- அம்பிகா
கல்லாப்பட்டி சிங்காரம் நடித்த
அந்த 7 நாட்கள்
(கலர்)
கதைவசனம், டைரக்ஷன் பாக்கியராஜ்

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30
6-30, 9-30
பிரதாப்— சோபா
மூடுபனி

லிடோ (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்
முரட்டுக் காளை

ஶ்ரீதர் தினசரி 10-30, 2-30, 6-00
(யாழ்ப்பாணம்)
விஜயன் - சத்தியகலா
தனிமரம்

ராணி தினசரி 10-30, 2-30, 6-15 மட்டும்
(யாழ். நகர்)
9-வது வாரம்
கமலஹாசன் - அம்பிகா
சகல கலா வல்லவன்

### கோட்டே துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம்:

# இருவர் கொல்லப்பட்டனர்!

## ஒருவருக்கு பலத்த காயம்!!

## இராணுவவீரர் ஒருவர் தவறுதலாக சுடப்பட்டு பலியானுர்!

(கொழும்பு)

கோட்டே பகுதியில் நடந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இருவர் கொல்லப்பட்டனர். இச்சம்பவத்தின்போது, தற்செயலாக இராணுவவீரர் ஒருவரும் பலியானுர். இச்சம்பவமே புலிகள் கொழும்புக்குள் ஊடுருவிட்டார்கள் என்ற வதந்திக்கு காரணமாக இருந்ததென தெரியவந்துள்ளது.

கொழும்பிற்குள் தமிழ்ஈழ விடுதலைப்புலிகள். அல்லது பயங்கரவாதிகள் ஊடுருவி ஆயுதப்படையினர் மீது தாக்குதல் நடத்தினுர்கள் என்ற வதந்தி கொழும்பில் காட்டுத்தீபோல் எங்கும் பரவியதைத் தொடர்ந்து வெள்ளி நண்பகல் மீண்டும் வன்செயல் ஆரம்பமானது.

வெள்ளி நண்பகல் கஸ்பேக் வீதியில் நடந்துள்ள இந்த அசம்பாவிதமே, புலிகள் பற்றிய வதந்தி பரவுவதற்கு காரணமாகும்.

கஸ்பேக் வீதியிலுள்ள கட்டிடம் ஒன்றின் கூரையிலிருந்து எவரோ ஒருவர் இராணுவரோந்து வாகனத்தின்மீது கைக்குண்டை வீசினுர். அப்பொழுது இராணுவத்தினர் திருப்பிச்சுட்டனர். இதனுல் இருவர் கொல்லப்பட்டனர். ஒருவர் காயமடைந்தார். இச்சம்பவத்தின்போது ஒரு இராணுவவீரர்தமதுதுப்பாக்கி தவறுதலாகப் பாவித்தமையினுல் மரணமடைந்தார். இதில் கொல்லப்பட்ட இருவரும் வடபகுதி பயங்கரவாதிகளல்லர்; புலிகளுமல்லர் அவர்கள் வேறு நபர்கள்.

வடபகுதி பயங்கரவாதிகள், அல்லது தமிழ்ஈழ விடுதலைப் புலிகள் கொழும்பில் பயங்கரவாதிகளை தாக்கினுர்கள் என்பது பொய்வதந்தியாகும். வதந்திகளை நம்பி மக்கள் வீண்கலவரமடையவேண்டாம் என்று கேட்கப்பட்டுள்ளனர். வாஞெலி மூலம் உண்மையான செய்திகளை அறிந்துகொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

## மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட தமிழ்க்கைதிகள்

[மட்டு. நிருபர் இரா. துரைரத்தினம்]

வெலிக்கடைச் சிறைச்சாலையில் 35 தமிழ்க் கைதிகள் கொலை செய்யப்பட்ட பின்னர் அங்கிருந்த ஏனைய தமிழ்க் கைதிகள் சிலர் மட்டக்களப்புச் சிறைச் சாலைக்கு பாதுகாப்புக் காரணங்களையிட்டுக் கொண்டுவரப்படடுள்ளனர்.

இக்கைதிகளை விசேட விமானப் படை விமானங்கள் நான்கு, ஐந்து தடவைகள் கொழும்பிலிருந்து மட்டக்களப்பு விமான நிலையத்துக்குக் கொண்டுவந்து சேர்த்தன.

மட்டக்களப்பு சிறைச்சாலைக்குக் கொண்டுவரப்பட்டுள்ள தமிழ்க்கைதிகள் பெயர்விபரம் வருமாறு:-

வண. சிங்கராசா, வண. சின்னராசா, திரு. நித்தியானந்தன், திருமதி நிர்மலா நித்தியானந்தன், டாக்டர். எஸ். ஏ. தர்மலிங்கம், திரு. கோவை மகேசன், வண.ஜெயகுலராசா, சோமசுந்தரம் ஜெயப்பிரகாஷ், செல்லத்துரை ராஜாஜி, தம்பிப்பிள்ளை மகேஸ்வரன், டேவிட், வாமதேவன், தங்க மகேந்திரன், முருகேசபிள்ளை ரவீந்திரராசா, தர்மலிங்கம் ஜெயதாஸ், அந்தோனிப்பிள்ளை ராயப்பு, பவானந்தன், தட்சணுமூர்த்தி, சுந்தரலிங்கம், பிரேமானந்தன், ஸ்ரீஸ்கந்தராசா, க. வரதராசா, மகேஸ்வரராசா, ஞானவேல் கறுப்பன், பத்மநாதன் ஞானப்பிரகாசம், ஞானசேகரம், மாணிக்கம்தாசன், சின்னத்தம்பி கணேசலிங்கம், கதிரவேலு தேவானந்த், வேலும் மயிலும் சுப்பிரமணிம், வாமதேவன்.

இக்கைதிகளில் சிலர் சிறுகாயங்களுக்குள்ளாகியுள்ளனர். மட்டக்களப்பு சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் பஞ்சலிங்கம் சிறைச்சாலைக்குச் சென்று காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளித்து வருகிறுர். (கி)

### ஆனைக்கோட்டை உயரப்புலத்தில்

## தரமான சந்தை அமைக்க நடவடிக்கை

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டையிலுள்ள கூழாவடி உயரப்புலம் மக்களின் நலன்கருதி இப்பகுதியில் ஒரு தரமானசந்தையொன்றை உருவாக்க வேண்டுமென்றும் ஆனைக்கோட்டையிலுள்ள மின் பாவனையாளர்களுக்கு ஏற்றவாறு மின்விநியோகம் செய்வதற்கு ட்ரான்ஸ்போமர் ஒன்று இங்குநிறுவப்படவேண்டுமென்னும் இருதீர்மானங்கள் ஆனைக்கோட்டை அ. மி, த. க. பாடசாலையின் அபிவிருத்திச் சங்கத்தலைவர் திரு. ந. சிவபாதத்தினுல் ஆனைக்கோட்டை கிராமோதயசபையின் மாதாந்தக் கூட்டத்தின்போது கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

ஆனைக்கோட்டை கிராமோதய சபையின் மாதாந்தக்கூட்டம் மேற்படி கிராமோதய சபைத் தலைவர் திரு. சி. சங்கரப்பிள்ளை தலைமையில் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாசாலையில் நடைபெற்றபோதே இத்தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மானிப்பாய் ஆனைக்கோட்டை பிரதான வீதியில் உள்ள பள்ளங்காட்டுப் பகுதி வீதிக்கான மின்சாரத் தொடர்பு உடனடியாக வழங்கப்படவேண்டும் என்றும் தற்போது இதனுல் மக்கள் பெரும் கஷ்டத்துக்குள்ளாகி வருகின்ருர்களென்றும் இப்பகுதியைச் சேர்ந்த சாவக்காட்டுப் பகுதி மக்களின் சுகாதார நிலைமை மோசமாக இருப்பதால் இது உடனடியாகக் கவனிக்கப்படவேண்டுமென்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

ஆனைக்கோட்டைக் கிராமோதய சபை உறுப்பினர் திரு. எஸ். விசுவலிங்கம், திரு. பாலசுந்தரம் உட்படப் பலர் கூட்டத்தில் சுலந்து பேசினர்.

## முதலாவது...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பழுதுபார்க்கப்பட்ட பின்னர் நேற்று சனிக்கிழமை காலை மீண்டும் இக்கப்பல் புறப்பட்டது. இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு காங்கேசன் துறை துறைமுகத்திற்கு வந்துசேருமென எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டாது கப்பலான 'பசிபிக்றிவர்' 400 அகதிகளுடன் இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் காலை 11 மணிக்குப் புறப்பட்டு செவ்வாய்க்கிழமை நண்பகல் காங்கேசன் துறை துறைமுகத்தை வந்தடையும்.

மூன்ருவது கப்பல் 3000அகதிகளுடன் நாளை திங்கட்கிழமை காலை 11 மணிக்குப் புறப்பட்டு புதன்கிழமை நண்பகல் காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடையும்.

கப்பலில் வருபவர்கள்பற்றிய விபரங்களை அறியவேண்டுமானுல் 'காங்கேசன்துறை ட்ரவல்ஸ், காங்கேசன் துறை' என்ற விலாசத்துடன் தொடர்புகொள்ளும்படி கேட்கப்படுகின்றனர். இதன் தொலைபேசி இலக்கம் 34-காங்கேசன்துறையாகும். (க)

## பெண்களுக்கு அபராதம்

(சுண்டிக்குளி)

அரியாலையைச் சேர்ந்த சோமசுந்தரம் பாக்கியம் என்ற பெண் சட்டவிரோதமாக கள் விற்றதுக்கு யாழ். நீதிபதி திரு. எஸ். நாகராசா ஐம்பது ரூபா அபராதம் விதித்தார். கலட்டியைச் சேர்ந்த சுப்பிரமணியம் திரவியம் என்ற பெண் சட்டவிரோதமாக சாராயம் விற்றதுக்கு நூற்று ஐம்பது ரூபா அபராதம் விதிக்கப்பட்டார்.

யாழ். மதுவரி இன்ஸ்பெக்டர் திரு. ஏ. ஏ. சோமபால இவர்கள்மீது குற்றம்சாட்டி வழக்குத்தாக்கல் செய்திருந்தார்.

## அகதிகளுக்கு...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மாச்செய்த மாவட்ட அபிவிருத்திசபைத் தலைவர் திரு. சு. நடராசா உட்பட மற்றும் பல இம்மகாநாட்டில் கலந்து கொண்டனர். அறுபதுபேர் இந்த மகாநாட்டில் கலந்து கொண்டனர். கப்பலில் வரும் அதிகளுக்கு உணவுவசதி மற்றும் போக்குவரத்து வசதி தங்குவதற்கான இடவசதி போன்றவைகுறித்து மகாநாட்டில்ஆலேசிக்கப்பட்டு முடிவு எடுக்கப்பட்டது.

அகதிகளுக்கு உணவுவகைகளை வழங்குவதற்கான பொறுப்பை காங்கேசன்துறை ஜெயபாலசிங்கம் கம்பனி மற்றும் லயன்ஸ், ருெட்டரி போன்ற பொது நிறுவனங்கள் ஏற்றுக்கொண்டனர்.

வந்திறங்கும் அகதிகளைக் கூட்டிச்செல்வதற்கான போக்குவரத்து ஏற்பாடுகளை காங்கேசன் ட்ரவல்ஸும் போக்குவரத்து சபையும் இணைந்து மேற்கொள்வதென்று முடிவு எடுக்கப்பட்டது.

இதற்கு இணைப்பதிகாரியாக காங்கேசன் ட்ரவல்ஸ்ஸை சேர்ந்த அதிகாரி திரு. சி. தியாகராஜா இருப்பார்.

அகதிகளுக்குப் பால்மாவகைகளை வழங்க விரும்புபவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள சந்தைப்படுத்தும் சபையின் விற்பனைத்திணைக்களத்தில் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

அகதிகளுக்கு உணவு உடை வழங்க விரும்புவர்கள், காங்கேசன்துறையிலுள்ள காங்கேசன் ட்ரவல்ஸ் அலுவலகத்தில் ஒப்படைக்கலாம்.

### யாழ் நகரில்

## பஸ் சேவை நடைபெற்றது பிரயாணிகள் குறைவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரம் கடந்த 3 தினங்களாக அமைதியாகக் காணப்படுகிறது.

வீதிகளில்சன நடமாட்டம் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது.

அரச காரியாலயங்களில், கடந்த வியாழன் வெள்ளியில் ஊழியர்களவந்திருந்தபோதும் நண்பகலுடன் வீடுகளுக்கு திரும்பிவிட்டனர்,

வெள்ளிக்கிழமை காலையில் வங்கிகள் சிறிது நேரம் திறந்திருந்தது. வங்கி வாசல்களில் கொடுக்கல் வாங்கல் செய்ய மக்கள்காணப்பட்டனர்.

வ. போ. ச. பஸ் சேவை காலை 6 மணிமுதல் நடைபெற்றபோதும் பிரயாணிகள் மிகவும் குறைவாகவே காணப்பட்டனர். மினி பஸ் சேவைகளும்மிககுறைவாகவேகாணப்பட்டது.

வீதிகளில் மோட்டார் சயிக்கில் நடமாட்டம் எதுவும் காணப்படவில்லை. அங்கு மிங்குமாக சைக்கிளில் சென்றுகொண்டிருந்தனர்.

நகரத்திலும் பஸ்நிலையங்களிலும் சில கடைகள் குறிப்பாக தேநீர்க் கடைகள் ஒற்றைக்கதவில் திறந்திருந்து வியாபாரம் நடைபெற்றது.

சினிமா தியேட்டர்கள் கடந்த ஒருவாரமாக காட்சிகள் எதுவும் நடைபெறவில்லை.

தனியார் கல்வி நிலையங்களும் மூடப்பட்டிருந்தன மாணவர்கள்எவரும் தனியார் கல்வி நிலையங்களுக்கு வரவில்லை.

எரிபொருள் நிலையங்களுக்கு முன்னுல் மக்கள் மண்ணெண்ணை வாங்க டின்களுடன் காத்து நிற்கிருர்கள். ஒரு எரிபொருள் நிலையத்தில் பெற்ருேலுக்காகக் கார்கள் மற்றும் வாகனங்கள் வரிசையாக நேற்று நிறுத்தப்பட்டிருந்தது,

டாக்சிகள் மிகக்குறைவாகவே நகரில்காணப்பட்டன.

ப. நோ. கூ. சங்கங்கள் கடந்த மூன்று தினங்களாக திறந்திருந்தன, பாவனையாளர்கள் முத்திரைகளை கொடுத்து அந்தியாவசிய பொருட்களை வாங்கி சென்றனர். சில ப. நோ. கூ. சங்கங்களில் பணம் கொடுத்தும் அத்தியாவசிய உணவுப்பொருட்களை வாங்கிச்சென்றனர்.

## கோடிக்கணக்கில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படவிருந்த பெரும் தட்டுப்பாட்டை இதனுல் நீக்கக்கூடியதாக இருந்ததாகக் கூறப்படுகிறது.

## திருநெல்வேலி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்விரு சந்தைகளிலும், மரக்கறி மிளகாய் தேங்காய்களை வாங்கி வந்த வியாபாரிகள், யாழ்ப்பாணம் பெரிய கடை சந்தையிலும் நகரத்தில் உள்ள சில்லறை கடைகளிலும் இருமடங்கு விலை கூட்டி விற்பனை செய்ததை காணக் கூடியதாணக் கூடியதாக இருந்தது. (க)

## அபராதம்

(சுண்டிக்குளி)

இருபாலையைச் சேர்ந்த முத்துத்தம்பி சோமசுந்தரம் சட்டவிரோதமாக சாராயம் விற்றதாக யாழ். மதுவரி திணைக்களத்தினரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் யாழ். நீதிபதி திரு. எஸ். நாகராஜா 250 ரூபா அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினுர்.

## நடமாடும் விற்பனை சேவை

(கொழும்பு)

நெல்சந்தைப்படுத்தும் சபை கொழும்பில் நடமாடும் விற்பனை சேவைகளைநடத்துகிறது.

அரிசி ஆலையில் வேலைசெய்யும் களஞ்சியகாப்பாளர்கள் லொறிச்சாரதிகள் ஏனையஊழியர்கள் நேற்றுக் கட்டாயமாக வேலைக்கு வருமாறு பணிக்கப்பட்டிருந்தனர். (க)

### முகாம்களில்

## வயிற்ருேட்டத்தை தடுக்க ஏற்பாடு

(கொழும்பு)

கொழும்பிலுள்ள அகதிகள் முகாம்களில் வயிற்ருேட்டம் போன்ற தொற்றுநோய்களை தடுக்க விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுகாதாரப்பகுதி ஊழியர்கள் அகதிகளின் சுகாதாரசேவைகளை கவனித்துவருகின்றனர்.

## மரண அறிவித்தல்

### S. கந்தசாமி

நவிண்டிலைச் சேர்ந்த S. கந்தசாமி அகால மரணமானுர். இவர் யூனிவேர்சல் ரெலெக்ஸ் உரிமையாளரும், இளைப்பாறிய அநுராதபுர ரவுண் ஓவசியரும், திருக்கேதீஸ்வர அம்மா சத்திர ஸ்தாபகரும், அநுராதபுர புதிய கதிரேசன் கோவில் தர்மகர்த்தாவும், நாகம்மாவின் அன்புக்கணவரும், அருந்தவராசாவின் அன்புத்தந்தையும், ராஜசுலோசனுவின் மாமனுரும், மோகன், ரகுநாதன், முகுந்தன் ஆகியோரின் அன்புப்பேரனும், நடராஜா (இளைப்பாறிய ரவுண் ஓவசியர், மன்னுர்) திருமதிகள் விசுவலிங்கம், நடராசா, ராஜரட்னம், நாகேந்திரம் ஆகியோரின் அன்புத்தமையனுருமாவார்.

அன்னுரின் பூதவுடல் (வெள்ளிக்கிழமை 29-7-83) கொழும்பு கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதை உற்ருர், உறவினர், நண்பர்கள் இத்தகவலை அறியத்தருகிருேம்.

—தகவல்: க. அருந்தவராசா

8097

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983-ம் ஆண்டு ஜூலை மாதம் 31-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number B 100236/81. Eelanadu-P. O. Box: 49, Telegram: Eelanadu, Telephone: 22389—24126.